| | | (6)தேங்காய் மட்டை,கற்றாழை அல்லது இணைப்பொருள்களில்இருந்து நார் தயாரித்தல் அல்லது கயிறு திரித்தல் –<br>10 குதிரை வேகத்திற்கு மேல் (பெரிய அளவு) | 750 | 1500 | " |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 10 குதிரை வேகத்திற்கு கீழ் (சிறிய அளவு) | 300 | 750 | “ |
| | | (7)நிலக்கரி,மரக்கரி, லீக்கோ கரி முதலியவைகள் சேர்த்து வைப்பது அல்லது விற்பனை செய்வது அடியிற்கண்டவைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் சேமித்து வைக்க அல்லது விற்பனை செய்ய / | 225 | 500 | “ |
| | | (1)நவதானியம், நெல், அரிசி, கோதுமை, பார்லி, வரகு, சோளம், தினை,கேழ்வரகு முதலியவை மொத்த வியாபாரம் (குடோன் மண்டி). | 300 | 1000 | “ |
| | | சில்லறை வியாபாரம் | 150 | 500 | “ |
| | | (2)எலிகளால் தின்னப்படும் நிலவிளைப் பொருள்கள் மற்றும் உள்ள பலசரக்கு சாமான்களை மொத்தமாக சேமிக்க அல்லது விற்பனை செய்ய வருடாந்திர வாடகை மதிப்பு – ரூ.500–க்கு மேற்பட்டது | 300 | 900 | “ |
| | | ரூ.100–க்கு மேற்பட்டு 500–க்கு மேற்படாதது | 150 | 450 | “ |
| | | ரூ.100–க்கு மேற்படாதது | 100 | 350 | “ |
| | | (3)கொப்பரை தேங்காய் சேகரித்தல் அல்லது அதன் மூலம் விவகரித்தல் | 150 | 500 | |
| | | (4)அவல், பட்டாணி, பொரிகடலை, வறுத்த வேர்கடலை முதலியவைகள் சேர்த்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல். | 150 | 500 | “ |
| | | (5)முந்திரிக்கொட்டை வறுத்தல் அல்லது எண்ணெய் எடுத்தல் | 150 | 500 | “ |
| 29 | “ | (1)சர்க்கரை தயாரித்தல் அல்லது சுத்தம் செய்தல் | 300 | 600 | “ |
| | | (2)வெல்லம், பனைவெல்லம் முதலியவை தயாரித்தல் | 150 | 500 | “ |
| | | (3)கற்கண்டு தயாரித்தல் | 150 | 500 | “ |
| 30 | “ | (1)பட்டாசுகள், மத்தாப்புகள் இதர வெடிகள் முதலியவை தீப்பற்றி எரியக்கூடிய பொருட்கள் வைத்து விற்பனை செய்வது. | 250 | 1000 | “ |
| | | (2)சினிமா பிலிம் சேகரித்து வைத்தல் | 150 | 500 | “ |
| | | (3)கடையில் அல்லது போட்டோ ஸ்டுடியோவில் ரோல் பிலிம் வைத்து இருப்பது. | 100 | | “ |
| | | (4)மண்ணெண்ணெய் அல்லது பெட்ரோல் அல்லது டீசல் இதர எண்ணெய்கள் சேகரித்து வைத்தல் அல்லது விற்பனைசெய்தல் :– (1)400 லிட்டர்கள் வரை | 75 | 500 | “ |
| | | (2)400 லிட்டருக்கு மேல் 1000 லிட்டர் வரை | 150 | 1000 | “ |
| | | (3)1000 லிட்டருக்கு மேல் 2000 லிட்டர் வரை | 300 | 2000 | “ |
| | | (4)பருத்தி பஞ்சு மொத்தமாக அல்லது சில்லறையாக சேர்த்து வைத்தல் அல்லது விற்பனை செய்ய | 225 | 500 | “ |
| 31 | “ | அருவருப்பான அல்லது துர்நாற்றம் உண்டாகிற எதையாவது தயார் செய்வது அல்லது சேகரித்து வைத்தல். (1) வல்கனைசிங் ஒர்க்ஸ் | 150 | 500 | “ |
| | | (2) ரப்பர் பிளாஸ்டிக் சாமான்கள் செய்ய விற்பனை | 750 | 1500 | “ |
| | | (3) வார்னிஸ் தயாரித்தல் | 200 | 500 | “ |
| | | (4) உலர்ந்த மீன்,கருவாடு முதலியன சேகரிக்க அல்லது விற்பனை செய்ய | 200 | 500 | “ |
| | | (5) எளிதில் தீப்பற்றக்கூடிய சூஆர்ஹானிக் பொருள்களைக் கொண்டு பொருள்கள் தயாரித்தல் அல்லது விவகரித்தல், பெரிய அளவு 10 குதிரை வேகத்திற்கு மேற்கொண்டு. | 300 | 600 | “ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சிறிய அளவு | 150 | 300 | " |
| | | (6)ரப்பர் அல்லது இதர டயர்களை புதுப்பித்தல். | 175 | 500 | " |
| 32 | 249 | மாநில அரசினால் விளம்பரம் மூலமாக விலக்களிக்கக்கூடிய இயந்திரங்கள் அல்லது யாதொரு இயந்திரத்தை அல்லது எரிபொருளை எந்தக் காரியத்திற்காகவும் ஸ்தாபிதம் கட்டணம் ஒரு தடவை மட்டும்.<br>1.மின்சார சக்தி /<br>(அ) வீட்டு உபயோகத்திற்கும் விவசாய உபயோகத்திற்கும்<br>(ஆ) தொழில் துறை காரியத்திற்கும் | | | |
| | | (1) சினிமா காரியங்களுக்காக ரெக்டிபயர்களில் நிறுவனங்கள் குதிரை வேகம் எதுவாக இருந்தாலும் பாதகமில்லை. | | | |
| | | 2)ஒரு குதிரை வேகத்திற்கு மேல் போகாமல் | 20 | 100 | " |
| | | 3)ஒரு குதிரை சக்திக்கு மேல் 5 குதிரை சக்திக்கு மேல் போகாமல் | 100 | 500 | " |
| | | (4) 5 குதிரை சக்திக்கு மேல் 10 குதிரை சக்தி வரை | 200 | 750 | " |
| | | (5)10 குதிரை சக்திக்கு மேல் 20 குதிரை சக்தி வரை | 400 | 1000 | " |
| | | (6) 20 குதிரை சக்திக்கு மேல் 30 குதிரை சக்தி வரை | 600 | 1500 | " |
| | | (7) 30 குதிரை சக்திக்கு மேல் 40 குதிரை சக்தி வரை | 800 | 2000 | " |
| | | (8) 40 குதிரை சக்திக்கு மேல் 50 குதிரை சக்தி வரை | 1500 | 3000 | " |
| | | (9) 50 குதிரை சக்திக்கு மேல் 100 குதிரை சக்தி வரை | 2500 | 5000 | " |
| | | (10) 100 குதிரை சக்திக்கு மேல் 200 குதிரை சக்தி வரை | 100 குதிரை சக்திக்கு ரூ.2500–ம் மேற்கொண்டு கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.5 வீதம் | 100 குதிரை சக்திக்கு ரூ.5000–ம் மேற்கொண்டு கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.50 வீதம் | |
| | | (11) 200 குதிரை சக்திக்கு மேல் 500 குதிரை சக்தி வரை | 200 குதிரை சக்திக்கு ரூ.3500–ம் மேற்கொண்டு கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.4 வீதம் | 200 குதிரை சக்திக்கு ரூ.7000–ம் மேற்கொண்டு கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.40 வீதம | |
| | | (12) 500 குதிரை சக்திக்கு மேல் | 500 குதிரை சக்திக்கு ரூ.4000–ம் மேற்கொண்டு கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.1 வீதம் | 500 குதிரை சக்திக்கு ரூ.8000–ம் மேற்கொண்டு கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.10 வீதம் | |
| | | 2)மின்சார சக்தி அல்லது இதர சக்திகள் மூலம் ஓட்டப்படும 2 குதிரை சக்தி வரை இயந்திரங்களுக்கு ( ஆயில் இஞ்சின், ஸடீல் இஞ்சின் வகையறா). | 2 குதிரை சக்தி வரை கட்டணமில்லை. 2 குதிரை சக்திக்கு மேல் உள்ள இயந்திரங்களுக்கு | 2 குதிரை சக்தி வரை கட்டணமில்லை. 2குதிரை சக்திக்கு மேல் உள்ள இயந்திரங்களுக்கு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 32 | 249 | (அ) வீட்டின் உபயோகத்திற்கு | 20 | 100 | “ |
| | | (ஆ) தொழில்துறை காரியத்திற்கு | 20 | 100 | “ |
| | | (1) 1 குதிரை சக்திக்கு மேல் அதிகரிக்காமல் | 100 | 200 | “ |
| | | (2) 1 குதிரை சக்திக்கு மேல் 5 குதிரை சக்தி வரை | 100 | 300 | “ |
| | | (3) 6 குதிரை சக்திக்கு மேல் 10 குதிரை சக்தி வரை | 200 | 500 | “ |
| | | (4) 10குதிரை சக்திக்கு மேல் 20 குதிரை சக்தி வரை | 400 | 800 | “ |
| | | (5) 20 குதிரை சக்திக்கு மேல் 30 குதிரை சக்தி வரை | 600 | 1000 | “ |
| | | (6) 30 குதிரை சக்திக்கு மேல் 40 குதிரை சக்தி வரை | 800 | 1500 | “ |
| | | (7) 40 குதிரை சக்திக்கு மேல் 100 குதிரை சக்தி வரை | 2000 | 3000 | “ |
| | | (8) 100 குதிரை சக்திக்கு மேல் 200 குதிரை சக்தி வரை | 4000 | 6000 | “ |
| | | (9) 200 குதிரை சக்திக்கு மேல் 500 குதிரை சக்தி வரை | 200 குதிரை சக்திக்கு ரூ.3000–ம் அதற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.1.50 பைசா வீதம் | 200 குதிரை சக்திக்கு ரூ.6000–ம் அதற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.10 பைசா வீதம் | |
| | | (10) 500 குதிரை சக்திக்கு மேல் | 500 குதிரை சக்திக்கு ரூ.7000–ம் அதற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.1.50 பைசா வீதம் உயர்ந்தபட்சக் கட்டணம் ரூ.1250 | 500 குதிரை சக்திக்கு ரூ.7000–ம் அதற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.10 பைசா வீதம்.,உயர்ந்தபட்சக் கட்டணம் ரூ.20 | |
| 33 | 250 | மின்சார சக்தி மூலமோ அல்லது இதர சக்தி முலமாக எந்த ஒரு தொழில் அல்லது தயாரிப்புக்குத் தோவையான இயந்திர நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக | | | |
| 34 | “ | ரைஸ் அல்லது மாவு அல்லர்,கிரைண்டர் ரோஸ்டர்பாலிஷர், ரோட்டரி எக்ஸ்பெல்லர், டிஸ்லின் டிக்ரேட்டரி, டிக்காட்டிக் கேட்டர் வின்னோயர் ஷாமில், ஜம்புரூட் மிஷின், ஸ்டீம் பாய்லர்,லேத்,வெல்டிங்,அச்சு இயந்திரம், சோப்பு தயாரிக்கும் இயந்திரம், ஏர்கம்பரசர், ரெபுஜிரேட்டர் மற்றும் இதுபோன்ற நிறுவனங்கள் காகிதம் அச்சிடுதல். | | | |
| | “ | மனித சக்தியைக் கொண்டு | 100 | 300 | “ |
| | “ | மின்சார சக்தியைக் கொண்டு | 150 | 450 | “ |
| 35 | 258 | (1)பால்பண்ணை (பால் டிப்போ) | 400 | 800 | “ |
| | | (2)பால் அல்லது பாலில் தயார் செய்யப்பட்ட பொருள்கள் கடைகளில் விற்பனை செய்தல். | 200 | 600 | “ |
| | | சைக்கிள், தள்ளுவண்டி, கைவண்டிகள், தலைச்சுமையின் மேற்கொண்ட பொருள்களை விற்பனை செய்ய | 150 | 500 | “ |
| | | (1)கசாப்புக்காரர் தொழில் செய்யவும்,ஆடு மாடுகளை வதை செய்யவும் 1–க்கு | 20 | 100 | “ |
| 35 | 258 | 2)மீன் விற்பனை செய்ய | 100 | 500 | “ |
| | | (3)கோழி விற்பனை செய்ய | 50 | 100 | “ |
| | | (4) (அ)மனிதருடைய உணவிற்காக மாமிசம் தயார் | 300 | 800 | “ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | செய்யப்படும் காசப்பு கடைக்கு (மட்டன் ஸ்டால்) | | | |
| | | (ஆ) மாட்டு இறைச்சிக் கடை | 300 | 800 | “ |
| 36 | “ | பாரவண்டி நிற்கும் தனிப்பட்ட இடத்தை ஆரம்பிக்க அல்லது தொடர்ந்து திறந்துவைத்துக் கொண்டிருக்க<br>(1)10,000 ச.மீட்டருக்கும் அதற்கு உட்பட்ட பரப்பளவு | 300 | 500 | “ |
| | | (2)10,000 ச.மீட்டருக்கு மேலும் 18,000 ச.மீட்டர் பரப்பளவிற்கு | 600 | 1200 | “ |
| | | (3)8,000 ச.மீட்டர் பரப்பளவுக்கு மேல் | 1000 | 2000 | “ |
| 38 | “ | ஷெடயூல் ஜனன மரண பதிவு ரெஜிஸ்டரில் ஒரு பதிவை 111 விதி (11) தேடுவதற்கு கட்டணம் | 20 | 100 | “ |
| | | (1)விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள ஒரு வருடத்திற்கு | 10 | 100 | “ |
| | | (2)மேற்கொண்டு கூடுதலாக உள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் | 10 | 100 | “ |
| | | (3)மேல் உள்ளதற்கு நகலை கொடுப்பதற்கு | 10 | 200 | “ |
| 39 | “ | (1)பதிவேடுகளை தேடுவதற்கு ஒரு வருடத்திற்கு கட்டணம் | 10 | 100 | “ |
| | | (2)மேற்கொண்டு ஒவ்வொரு வருடத்திற்கும் | 10 | 100 | “ |
| | | (3)பதிவேடுகளை நகல் எடுக்க | 10 | 100 | “ |
| 40 | “ | (1)சர்வே ஸ்கெட்சுக்கு | 150 | 500 | “ |
| | | (2)ஒரு பீல்டு சர்வே ஸ்கெட்சுக்கு தயார் செய்து அத்தாட்சி கொடுக்க | 150 | 500 | “ |
| | | (3)எப்லைன் குறிப்பிடுவதற்கு | 150 | 300 | “ |
| | | (4)ரெவின்யூ படத்தின் கிரயம் | 150 | 300 | “ |
| 41 | “ | ஷெட்யூல் ஜப்தி கட்டணம் 4 விதி 33(1) | சென்னை மாவட்ட நகராட்சியின் சட்டத்தின் இணைப்பு சி—ல் குறிப்பிட்டுள்ள ஆதிகபட்சக் கட்டணம் ரூ.100 | சென்னை மாவட்ட நகராட்சியின் சட்டத்தின் இணைப்பு சி—ல் குறிப்பிட்டுள்ள ஆதிகபட்சக் கட்டணம் ரூ.500 | |
| 42 | 254 | முனிசிபல் கவுன்சில் ஆடு,மாடுகளை அடிக்கும் தொட்டிகளை உபயோகித்து ஆடு,மாடுகளை அடிப்பதற்கு கட்டணம் | 10 | 50 | “ |
| 43 | 278 | பிரேதங்களைப் புதைப்பதற்காகவாவது, எரிப்பதற்காகவாவது அல்லது வேறுவிதமாக ஒருவகை செய்வதற்குரிய இடத்தை தனிப்பட்ட முறையில் பதிவு செய்து கொள்ள | 100 | 100 | “ |
| | | முனிசிபல் நிர்வாகத்தினரை தவிர்த்து மற்றவர்கள் பிரேதங்களை புதைப்பதற்காகவாவது, எரிப்பதற்காகவாவது அல்லது வேறு விதமாக ஒருவகை செய்வதற்குரிய இடத்தைப் புதிதாக ஏற்படுத்தவோ கட்டவோ அல்லது உபயோகிப்பதற்கு. | 300 | 500 | “ |
| | | மயானத்தில் நினைவுச்சின்னம் எழுப்பிக்கொள்ள 8’x3’ அளவுள்ள இடமோ அல்லது அதற்கு குறைவான இடம் மட்டும் ஒதுக்கீடு செய்யப்படும் | 100 | 500 | “ |
| 44 | | (1) டைல்ஸ் சேமிப்பு விற்பனை கடை | | 500 | “ |
| | | (2) பெயிண்ட் சேமிப்பு விற்பனை | | 500 | “ |
| | | (3) ஸ்பார்ஸ் விற்பனை – இரண்டு மற்றும் நான்கு சக்கரம் | | 500 | |
| | | (4) எலட்ரிக்கள் மற்றும் சேமிப்பு விற்பனை எலட்ரானிக் | | 1000 | “ |
| | | (5) விற்பணை மார்க்கெட் | | 500 | “ |
| | | (6) செல்போன் டவர் | | 10000 | “ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | (7) செல் விற்பனை கடை | | 2000 | " |
| | | (8) ப்ளக்ஸ் ஆப்செட் பிரிண்ட் | | 1000 | " |
| | | (9) ஹர்வேர் பிளாக்ஸ் கம்பெனி | | 5000 | " |
| | | (10) நடை பாதை தார் தயாரித்து சேமித்து விற்பனை | | 3000 | " |
| | | (11) டைலர் கடை மிஷின்கள் –1 | | 100 | " |
| | | HP உல்பட | | 100 | " |

<u>நிபந்தனை:–</u>

1. பிரதி வருடம் ஏப்ரல் 1 ஆம் தேதிக்கு 30 நாட்களுக்கு முன்பாக உரிமம் புதுப்பித்து கொள்ள வேண்டும். தவறினால் கால தாமதமாக உரிமம் புதுப்பித்துக் கொள்ள கோரும் விண்ணப்பத்தின் மீது உரிமத்தொகையில் 25% சத வீதம் அபராதம் வசூல் செய்யப்படும்

## பொருள் எண். 23

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனங்கள் பராமரிப்பு பணி மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கான பழுதுகளை நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்:23 நாள்:30.06.2020 ல் ரூபாய் 10.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது, அதில் மீதம் உள்ள தொகையில் TN-55-9353 டிப்பர் லாரி வாகனம் பராமரிப்பு பணி மேற்கொள்ள கடந்த 06.09.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.V.குணசேகரன்<br>ஸ்ரீ காதம்பரி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் அறந்தாங்கி | 15,700.00 |
| 2 | திரு.பி.காசிலிங்கம்<br>ஸ்ரீ செல்வி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் அறந்தாங்கி | 15,900.00 |
| 3. | திரு.K.பாலு<br>ஸ்ரீ மணிகண்டன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் அறந்தாங்கி | 16,500.00 |

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. V.குணசேகரன் ஸ்ரீ காதம்பரி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் அறந்தாங்கி அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. பொதுசுகாதாரபணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்:00145/2018/எச்1)

## பொருள் எண். 24

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (SBM) இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வர்த்தக நிறுவனங்கள் பொது மக்களுக்கு விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு பேரணி, சுவர் விளம்பரம், பிளக்ஸ்போர்டு,. நோட்டீஸ் அச்சடித்து விநியோகம் செய்திட திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சம் தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:4586 /2021/எச்1)

## பொருள் எண். 25

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்கள் பராமரிப்பு பணி மற்றும் தகுதிச்சான்று பெறுவதற்கான பழுதுகளை நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்: 23 நாள்: 30.06.2020 ல் ரூபாய் 10.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது, அதில் மீதம் உள்ள தொகையில் TN 55 AT 9117 JCB வாகனம் பராமரிப்பு பணி மேற்கொள்ள கடந்த 28.09.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ராம் பேக் எக்யூப்மெண்ட் & சர்வீஸ்<br>TATA HITACHI DEALAR SAL & SERVICE, திருச்சி | 1,84,519.00 |

**அலுவலகக் குறிப்பு:-**

1. மேற்கண்ட ராம் பேக் எக்யூப்மெண்ட் & சர்வீஸ் TATA HITACHI DEALAR SAL & SERVICE திருச்சி JCB வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட டீலர் நிறுவனம் என்பதால் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனம் என்பதால் பொதுசுகாதாரபணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம் (ந.க.எண்:7564/2017/எச்1)

## பொருள் எண். 26

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை காலம் துவங்கி விட்டப்படியால் மழை காலத்தில் டெங்கு காய்ச்சல், காலரா, டைபாய்டு, வைரஸ் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. மேற்கண்ட தொற்று நோய்களை கட்டுப்படுத்துவது சம்மந்தமான விழிப்புணர்வு குறித்து பொதுமக்கள் நன்கு அறியும் வண்ணம் விழிப்புணர்வு கூட்டங்கள், பேரணி, ஒலி பெருக்கி மூலம் ஆட்டோ விளம்பரம் செய்தல், பிளக்ஸ்போர்டு அடித்தல், விழிப்புணர்வு நோட்டீஸ் அச்சடித்து விநியோகம் செய்தல் போன்ற பணிகளை செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சம் தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 4587 /2021/எச்1)

## பொருள் எண். 27

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பிறப்பு இறப்பு பதிவு பணிகள் 1972 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்டு அனைத்து பதிவேடுகளும் பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சில பதிவேடுகள் முன் அட்டை மற்றும் பின் அட்டை பைண்டிங் சேதம் அடைந்து பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளது.

எனவே மேற்கண்ட சேதம் அடைந்த பதிவேட்டை பைண்டிங் செய்து பராமரிப்பு செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.75000 (ஏழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 4589 /2021/எச்1)

## பொருள் எண். 28

இந்நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மூலம் Micro Composhing Center மற்றும் On Site Compostiong Center வழியாக மக்கும் குப்பைகள் Shredding Machine உதவியுடன் குப்பைகள் அரைக்கப்பட்டு கலவை உரம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட இடத்தில் உள்ள Shredding Machine எடைமெஷின் அவ்வப்பொழுது பராமரிப்பு பணிகள் செய்திடவும், விற்பனை ஆகாத பிளாஸ்டிக் Balling Machine மூலம் கட்டுகள் கட்டுவதற்க்கு தேவைபடும் Tap Roll மற்றும் மக்கும் குப்பைகளை ஜல்லடை மூலம் பிரித்து எடுப்பதற்கு ஜல்லடை இரண்டு வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சம் நிதியை பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:4590 /2021/எச்1)

## பொருள் எண். 29

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்து பொதுமக்கள், வர்த்தக நிறுவனங்களுக்கு நன்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் புதுக்கோட்டை அவர்கள் உத்திரவிட்டுள்ளார்.

எனவே இந்நகரில் விழிப்புணரவு கூட்டம், பேரணி, ஆட்டோ விளம்பரம், பிளக்ஸ் போர்டு, சுவர் விளம்பரம், பிட் நோட்டீஸ் அச்சடித்து விநியோகம் செய்தல் போன்ற பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சத்திற்க்கு பொது நிதியில் இருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்:4588 /2021/எச்1)

## பொருள் எண். 30

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்: 219 நாள்:21.06.2002–ல் கண்டுள்ள கடிதத்தில், நகராட்சிகளில் சேகரம் ஆகும் மக்கும் குப்பைகளை கொண்டு கம்போஸ்ட் கலவை உரம் (Compost) தயாரித்து வரப்படுகிறது என்றும் கலவை உரத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் அதிக அளவில் உள்ளதாலும், நகர கம்போஸ்ட் விவசாயிகளிடையே அதிக அளவில் வரவேற்கப்படுவதில்லலை எனவும், மேற்கண்ட கலவை உரத்தை ஏலத்தில் விட விளம்பரம் விடுத்தும் ஏலம் கோர முன்வருவதில்லை என்றும் நகராட்சிகளில் குவிந்து வரும் கம்போஸ்ட் , சுகாதாரக் கேடு ஏற்பட வழி வகுக்கிறது என்றும்,நகர கம்போஸ்ட் உரத்தை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி ஊக்கப்படுத்துவதன் மூலம் வரும் ஆண்டுகளில் கம்போஸ்ட்டின் பயன் விவசாயிகளுக்கிடையே பெருகும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும் நகராட்சிகளில் விற்பனையாகாத நகர கம்போஸ்ட் கலவை உரத்தை நகராட்சிகளுக்கும் மற்றும் சுற்றியுள்ள விவசாயிகளுக்கு நகர்மன்ற ஒப்புதலுடன் இலவசமாக வழங்கவும், கம்போஸ்ட்டை இருப்பிலிருந்து கழித்து கொள்ளவும் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அரசானையை செயல்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. அரசாணை பதிவு செய்யலாம்.
2. கலவை உரத்தை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்: 4533/2021/எச்1)

## பொருள் எண். 31

இந்திய அரசின் DAY – NULM திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்மடுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதன்படி அறந்தாங்கி நகராட்சியில் பதிவு பெற்ற சாலையோர வியாபாரிகள் 138 பேர் உள்ளனர். மேற்கண்ட சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்: 20789/2021/UPA1 நாள்: 20.9.2021ல் மூன்று வகையான வியாபாரம் செய்யும் ( (1 ) காய்கறிகள் மற்றும் பழங்கள் (2 ) உணவு பொருட்கள் ( 3) பூக்கள் மற்றும் பூஜை பொருட்கள் ) வண்டிகள் வழங்குவதற்கான விரிவான திட்ட அறிக்கை ( Detailed Implemetation Plan ) DPR தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அறந்தாங்கி நகராட்சியில் பதிவு பெற்ற சாலையோர வியாபாரிகள் 138 நபர்களில் முதல் கட்டமாக பழங்கள் மற்றும் காய்கரிகள் விற்பனை செய்யும் வண்டி 48 பயனாளிகளுக்கும், உணவு பொருள் விற்பனை செய்யும் வண்டி 54 பயனாளிகளுக்கும் ஆக 102 நபர்களுக்கு உரிய வண்டிகளுக்கான செலவினம் ரூபாய் 42,60,000 ( நாற்பத்தி இரண்டு இலட்சத்து ஆறுபதாயிரம்) திட்ட மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம் ( ந . க. எண்: 7374/ எப்1 / 2016 )

## பொருள் எண். 32

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட லெட்சுமி நரசிம்ம புரம் வார்டு–D பிளாக்–23 நகரளவு எண்: 10/9A , 10/9B, ( பழைய சர்வே எண்: 228/7)–ல் திருமதி சிந்தாமணி (ம) மணிகண்டன் ஆகியோருக்கு சொந்தமான 9500 சதுர மீட்டர் (2.346 ஏக்கர்) பரப்பளவு கொண்ட மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்ட அறந்தாங்கி முழுமைத் திட்டத்தில் விவசாய பகுதியில் இருந்து குடியிருப்பு மனை பிரிவிற்கு மாற்றம் செய்யவும், மேற்படி மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கவும் பெறப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4 (நி.ப.மா.)) துறை அரசாணை (2டி) எண்–186 நாள்:03.08.2021–ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட அறந்தாங்கி முழுமைத் திட்டத்தில் விவசாய உபயோகப்பகுதியில் இருந்து குடியிருப்பு உபயோகப்பகுதியாக நிலப்பயன் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் புதுக்கோட்டை அவர்களின் கடிதம் ந.க.எண்: 542/2020/புமா நாள்: 07.09.2021 ம் தேதிய உத்தரவில் மேற்கண்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் ம.வ.மா.ந.ஊ.அ (பு.மா) எண் 40/2021 எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மனைப் பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் அறந்தாங்கி நகராட்சி ஆணையர் பெயருக்கு தானமாக தானபத்திரம் எண் 2882/2021 நாள்:23.08.2021ல் பெறப்பட்டுள்ளது. எனவே உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் புதுக்கோட்டை அவர்களின் மனைப்பிரிவு வரைபடம் தொழில்நுட்ப ஒப்புதலின்படி மேற்படி மனைப்பிரிவிற்கு உரிய கட்டணங்கள் பெற்றுக்கொண்டு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

### அலுவலக குறிப்பு:–

1. மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம். (ந.க.எண். 4672/2020/எப்1)

## பொருள் எண். 33

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பட்டுக்கோட்டை சாலையில் தாலுக்கா அலுவலகம் பகுதியில் சர்வே எண்: 3/11 அமையப்பெற்ற திரு.மனோகரன் என்பவருக்கு சொந்தமான மிகவும் பழுதடைந்து எந்நேரத்திலும் இடிந்து விழும் ஆபத்தான நிலையில் உள்ள கட்டிடம் ஆணையர் அவர்களின் அறிவுரைகளின்படி இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர் அவர்கள் மூலம் கள ஆய்வில் கண்டறியப்பட்டு சம்மந்தப்பட்ட உரிமையாளருக்கு கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திட 09.11.2017, 06.04.2018 மற்றும் 12.06.2018 ஆகிய தேதிகளில் அறிவிப்பு வழங்கியும் 24.10.2018ம் தேதியில் கட்டிடத்தை பாதுகாப்பாக இடித்து அப்புறப்படுத்திடவும் உத்தரவு வழங்கப்பட்டது உரிமையாளர் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தாமல் நகராட்சி நிர்வாகம் மீது சென்னை உயர் நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து வழக்கு எண் W.P(MD) No.(994) பதிவு செய்யப்பட்டுள்ளது மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கறிஞர் திரு பி.மகேந்திரன் அவர்கள் பத்திவாரி பதில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் இதற்கான வழக்கறிஞர் கட்டணம் (ரூ.7500) வழங்கிடவும் மற்றும் உத்தேசசெலவினம் ரூ. 15000/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க. எண்.6327 / 2017/ எப்1)

## பொருள் எண். 34

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட அக்ரஹாரம் பகுதியில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான நகரளவு எண்.35/1 வார்டு—C இடத்தில் நகராட்சியால் கட்டப்பட உள்ள வணிகவளாக கடைகள் கட்டிடம் ஏதும் கட்டக்கூடாது என நகராட்சிக்கு எதிராக திருமதி விஜயலெட்சுமி என்பவரால் (வழக்கு எண்:O.S. No.38/2018) தொடரப்பட்ட வழக்கில் இந்நகராட்சி வழக்கறிஞர் திரு .பா.வெங்கடேசன் நகராட்சி சார்பாக எதிர்வழக்குரை தாக்கல் செய்தும் இடைக்காலத் தடை உத்தரவு கோரிய மனுவில் (IA.365/18) எதிர் உரை தாக்கல் செய்து நகராட்சி சார்பில் ஆஜராகி விசாரணை செய்ததின் பெயரில் தடையானை மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேலும் இவ்வழக்கு மனுதாரரால் சென்னை உயர் நீதி மன்றம் மதுரை கிளையில் மேல்முறையீடு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது (வழக்கு எண் W.P(MD).9759) மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.பி. மகேந்திரன் ஆஜராகி பத்திவாரி பதில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் இதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500.00 வழங்கிடவும் மற்றும் உத்தேச செலவினம் ரூ.15,000/—க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க. எண். 6701/2017/எப்1)

## பொருள் எண். 35

இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பராமரிப்பு பிரிவு வாகனங்களுக்கு 2021—2022ம் ஆண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தகுதிச்சான்று மற்றும் காப்பீடு தொகை செலுத்த ஆகும் உத்தேச செலவினத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்—73 நாள்:31.08.2021ல் ரூபாய் 10.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது, மேற்கண்ட அனுமதிக்கப்பட்ட செலவீனத்தொகையில் TN-55-Z-7684 வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு கடந்த 27.09.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

.

| வ.எண் | ஒப்பந்தாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | திரு.வி.குணசேகரன்,<br>காதம்பரி ஆட்டோ டீஸல் ஒர்க்ஸ்,<br>கட்டுமாவடி ரோடு, அறந்தாங்கி | ரூ. 32,150.00 |
| 2) | திரு.பி.காசிலிங்கம்,<br>ஸ்ரீ செல்வி ஆட்டோ & டீஸல் ஒர்க்ஸ்,<br>பழைய ஆஸ்பத்திரி ரோடு, அறந்தாங்கி | ரூ. 33,300.00 |
| 3) | திரு.கே.பாலு,<br>ஸ்ரீ மணிகண்டன் ஆட்டோ & டீஸல் ஒர்க்ஸ், ஆவுடையார் கோவில் ரோடு, அறந்தாங்கி | ரூ. 33,450.00 |

**அலுவலகக்குறிப்பு:—**

1. குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.வி.குணசேகரன், காதம்பரி ஆட்டோ டீஸல் ஒர்க்ஸ், கட்டுமாவடி ரோடு, அறந்தாங்கி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்
2. அலுவலக பணிகள், கொரோனா தடுப்பு நடவடிக்கை பணிக்கு ஈப்பு வாகனத்தின் தேவையினை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.6347/2016/இ1)

**பொருள் எண்.36**

மத்திய அரசின் ஜல் ஜீவன் மிஷன் (JJM – 2.0) திட்டத்திற்காக இந்நகராட்சி பகுதியில் உள்ள நீர்நிலைகள் குறித்த விபரம் தெரிவிக்கவும், மேற்படி நீர் நிலைகளை மேம்பாடு செய்யவும், அதற்கான விரிவான திட்ட அறிக்கை அளிக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரைபடி மேற்படி நீர் நிலைகளில் உள்ள நீரை பரிசோதனை மேற்கொண்டு அதன் சான்று பெற்று சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியில் உள்ள 28 நீர் நிலைகளில் உள்ள நீரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பரிசோதனை மேற்கொள்ள அனுமதியும், பரிசோதனை கட்டணம் மற்றும் நீர் கொண்டு செல்ல கேன் வாங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.60,000/—க்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தொகை செலுத்தி பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்.37**

இந்நகராட்சி பகுதியில் பொது நிதியின் கீழ் ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.14 அவுலியா நகர் முதல் வீதியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.57 நாள்.31.08.2021ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு, மேற்படி பணி மேற்கொள்ள 17.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | திரு.பி.மோகன் ராஜ், ஒப்பந்ததாரர் | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2) | திரு.டி.மெய்ஞானம், ஒப்பந்ததாரர் | 1.04 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு திரு.பி. மோகன்ராஜ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.06 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.
(ந.க.எண். 3345/2021/இ1)

**பொருள் எண்.38**

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் மற்றும் பொது நிதியிலிருந்து வாங்கப்பட்ட டம்பர் பிளேசர் பின்கள் தற்பொழுது தூய்மை இந்தியா இயக்க கொள்கையின் படி குப்பை கழிவுகளை சேகரம் செய்யமால் உருவாகும் இடத்திலேயே உரமாக்க தெரிவிக்கப்பட்டுள்ளதால் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு நகராட்சி அலுவலகம் எதிரில் உள்ள காலியிடத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பின்களை அரசின் சீர் மிகு அலுவலகம் உத்திரவின் படி பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும் நாளிதழில் விளம்பரம் மேற்கொள்ள உண்டான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2703/இ1/2021)

**<u>பொருள் எண்.39</u>**

இந்நகராட்சி பகுதியில் எதிர்வரும் பருவ மழை மற்றும் இயற்கை இடர்பாடுகளை எதிர் கொள்ளும் வகையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை அவர்களின் அறிவுரைப்படி மணல் மூட்டைகள், சவுக்கு கம்புகள் ஆகியவை தயார் நிலையில் வைக்கவும், தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை டீசல் என்ஜின் கொண்டு வெளியேற்றவும், ஜேசிபி, பொக்கலைன் எந்திரங்களை வாடகைக்கு எடுத்து பயன்படுத்தவும் மற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 5.00 லட்சத்திற்க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலரது முன் அனுமதி அளித்துள்ளதனை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். –2021–இ1)

**<u>பொருள் எண்.40</u>**

ஜல் ஜீவன் மிஷன் (JJM) திட்டத்தின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான சாலைகள், வடிகால், கல்வெட்டுகள், மின் கம்பங்கள் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள், நீர் நிலைகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான அனைத்து சொத்துக்கள் தொடர்பான இடங்கள் வரைபடம் மற்றும் Google Survey யின் படி அட்ச ரேகை, தீர்க்க ரேகையுடன் (Longtitute, Latitiute ) வரைபடம் தயாரிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரை வழங்கியதன் படி மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.50 லட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.2697/2021/இ1)